

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று (08.09.2025 ஆணையர் அலுவலகத்தில் திருச்செந்தூர், திருத்தணி, மருதமலை திருக்கோயில்கள் மற்றும் வடலூர் வள்ளலார் தெய்வ நிலையம் ஆகியவற்றில் ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவின்கீழ் (Master Plan) நடைபெற்று வரும் திருப்பணிகள் குறித்த சீராய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி.பழனி, திருமதி சி.ஹரிப்ரியா, பொ.ஜெயராமன், திருமதி கோ.செ.மங்கையர்க்கரசி, தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி. சிறப்புப் பணி அலுவலர் சி.லட்சுமணன், திருச்செந்தூர் திருக்கோயில் தக்கார் ஆர்.அருள்முருகன், திருத்தணி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ஸ்ரீதர், மருதமலை திருக்கோயில் தக்கார் ஜெயகுமார், இணை ஆணையர்கள் மற்றும் பொறியாளர்கள் உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதி திருத்தணி ஒன்றியம் பி.ஆர்.பள்ளி கிராமத்திற்கு குறைந்த மின்னழுத்தம் காரணமாக கோரமங்கலம், இஸ்லாம் நகர், கிருஷ்ணசமுத்திரம் வழியாக பி.ஆர்..பள்ளி வரை இருந்து மின்பாதையை தவிர்த்து மாற்றுப்பாதையில் மின்பாதை அமைத்து, மின் விநியோகம் செய்ய வேண்டும் என்ற கிராம மக்களின் கோரிக்கையேற்று கே.ஜி. கண்டிகை துணை மின் நிலையத்திலிருந்து சிறுகுமி, பாகவதபுரம் பகுதிகள் வழியாக நேரடியாக 75 மின் கம்பங்கள் அமைத்து, புதிய மின்பாதையை ஏற்படுத்தி அதனை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். உடன் தொகுதி பார்வையாளர் சண்முகநாதன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் கே.இராஜேந்திரன், என்.கிருஷ்ணன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### நீலகிரி மாவட்டத்தில்

# கட்டிடங்கள் கட்டுமான வரைவிதிகள்!

## அமைச்சர் சு.முத்துசாமியை அரசு தலைமை கொறடா கா. ராமச்சந்திரன் சந்தித்து கோரிக்கை!

சென்னை, செப்.9-

நீலகிரி மாவட்டத்தில் 1993 ஆம் ஆண்டில் அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் முதன்மை திட்டத்தின் அடிப்படையில் கொண்டு வரப்பட்ட கட்டிடங்கள் கட்டுமான வரை விதி சட்டத்தின் மூலமாக நீலகிரி மாவட்டத்தில் ஏழை எளிய மக்கள் கட்டிடங்களுக்கு அனுமதி பெற மிகக் கடினமான விதிமுறைகள் இருந்ததின் காரணமாக மாவட்டம் முழுவதும் சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டிடங்கள் அனுமதி பெறாமல் பொதுமக்கள் கஷ்டப்படுகின்றனர்.

இந்நிலையில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று திராவிட மாடல் ஆட்சிநாயகர் தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அவர்களின் உத்தரவின்படி, நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களின் ஆலோசனைக் கிணங்க, நேற்று (8.09.2025)



தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், தமிழ்நாடு வீட்டு வசதி துறை அமைச்சர் முத்துசாமி அவர்களிடம் நேரில் சந்தித்து நீலகிரி மாவட்டத்தில் இருக்கும் கட்டிட கட்டுமான வரைவிதி சட்டத்தின் உண்மைத்தன்மையையும், பொதுமக்களின் கஷ்டங்களையும் எடுத்துக் கூறி இச்சட்டத்தினை தளர்வு செய்து மலை மாவட்ட மக்களுக்கு எளிமையான முறையில் அமைத்து, அனுமதி பெற எழுத்து மூலமாகவும் நேரடியாகவும் கேட்டுக் கொண்டார்.

இக்கோரிக்கையை ஏற்று வீட்டு வசதி துறை அமைச்சர் கூறும் போது நீலகிரி மக்கள் கோரிக்கை ஏற்று உடனடி தீர்வு காணப்படும், மேலும் அதிகாரிகளுடன் நீலகிரி மாவட்டத்திற்கு வருகை புரிந்து மாவட்ட அதிகாரிகளுடனும் மக்களுடனும் கலந்துரையாடி விரைந்து தீர்வு காணப்படும் என்று உறுதி அளித்தார்.

இந்நிகழ்வின் போது வீட்டு வசதித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா உட்பட அரசுத் துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்.

### ஊடகங்களில் தமிழ்ச் செய்திகளைத் தவறில்லாமல் உச்சரிக்கும்

# நான்கு ஊடகவியாளர்கள் தேர்வு!

## தலா ரூ.25 ஆயிரம் பரிசுத் தொகை – பாராட்டுச் சான்றிதழ் வழங்கல்!

சென்னை, செப்.9-

தமிழ் வளர்ச்சித் துறையின் 2022-2023ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது, அமைச்சர் (தொழில் துறை) அவர்களால் சட்டமன்றப் பேரவையில் 19.04.2022 ஆம் நாளன்று பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

“ஊடகங்களில் தமிழ்ச் செய்திகளைத் தவறில்லாமலும், அழகாகவும், சரியாகவும் உச்சரிக்கும் செய்தி வாசிப்பாளர்கள், நேர்காணல் செய்பவர்கள் மற்றும் நிகழ்ச்சித் தொகுப்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுக்கு நான்கு பேரைத் தெரிவு செய்து அவர்களை பாராட்டி ஒவ்வொருவருக்கும் ரூ.25,000/ பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும். என அறிவிகிகப்பட்டது.

2023 2024 ஆம் ஆண்டிற்கான சிறந்த தமிழ் உச்சரிப்புக்கான விருதாளரை தேர்வு செய்ய ஏதுவாக அனைத்து காட்சி ஊடக நிறுவனங்களிடம் இருந்த ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்களை தங்களை பற்றிய குறிப்புகளுடன் பின்வரும் நா பிறழ் தொடர்களை மை அணலில் பற்றிய அணுப் போன்ற அனலால் அனு வெந்து போனது. அணுக்கத்தார் அனுக்கம் என்றும் தொல்லை அண்ணத்தில் அன்னம் படலாம; கன்னம் படலாமா? கன்னி அணிந்த கண்ணி காணத்தில் வந்ததா? கானத்தில் சேர்ந்த்தா? அலம் பிடித்தால் அளம் வருமோ? அளைக்குள்ளே புகுந்த அலை அழைத்து வருமோ? கறையானை அவள் அல்லில் செய்த அவலை அள்ளி எடு, ஒலியும் ஒளியும் ஒழிந்து போனால் ஒள் உளதாகுமோ?. கழகத்தார் ஆடும் கழங்கு கலகம் விளைக்குமா? களங்கம் தருமா? அரம் கொண்டு அறம் அரியலாமா? அரியை அறியா அரிவை அருவை அறுத்த இறவியன்றோ? ஒருத்தலை ஒறுத்து ஒருவினால் ஒறுவு இலதாகுமோ?. தமிழுக்குக் கரையில்லை கறுப்பென்பது கறையுமில்லை உச்சரித்து அதனை காணொலியாக பெறப்பட்டு தேர்வுக் குழுவின் முன் காட்சிபடுத்தப்பட்டது.

இவ்விருதிற்கென 2023 2024ஆம் ஆண்டிற்கான சிறந்த தமிழ் உச்சரிப்பாளர் விருதாளருக்கான தகுதியானவர்களாக முனைவர் வா.கி. சர்வோதய இராமலிங்கம் திருமதி. வேதவள்ளி செகதீசன் திருமதி. ஜோ. அருணோதய சொர்ணமேரி திரு. ப. மோகன் ராஜ் ஆகிய நான்கு ஊடகவியலாளர்கள் தெரிவு செய்யப் பெற்றுள்ளனர்.

சென்னை, தலைமைச் செயலகத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அவர்களால் முனைவர் வா.கி. சர்வோதய இராமலிங்கம் திருமதி. வேதவள்ளி செகதீசன் திருமதி. ஜோ. அருணோதய சொர்ணமேரி ப. மோகன் ராஜ் ஆகிய நால்வருக்கும் நேற்று (08.09.2025) 2023 2024ஆம் ஆண்டிற்கான சிறந்த தமிழ் உச்சரிப்பு விருதாளர் ஒவ்வொருவருக்கும் ரூ.25,000/க்கான காசோலையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கிச் சிறப்பிக்கப்பெற்றது.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வை.ம.அருள்தாசன் ஏற்பாட்டில் பி.தமிழரசன் முன்னிலை!

# வட்டச் செயலாளர் மு.மாணிக்கவேலன் படத்திறப்பு!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. நினைவு பேருரை ஆற்றினார்!

சென்னை, செப்.9-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி 3 வது வட்ட கழக செயலாளர் செயல் வீரன் மு. மாணிக்கவேலன் உடல் நலக்குறைவால் இயற்கை எழுதினார்.

அவரது மறைவை யொட்டி திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள் தாசன் ஏற்பாட்டில் 07.09.25 அன்று மாலை 6 மணியளவில் 3வது வட்டம் அன்னை சிவகாமி நகர், 1 வது தெருவில் அவர்களது இல்லத்தில் படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் 3 (அ) வது வட்டக் கழக செயலாளர் மாமன்ற உறுப்பினருமான பி.தமிழரசன்( எ) தம்பியா. எம்.சி. மற்றும் வட்டக் கழக செயலாளர்கள் டி.சேகர் எக்ஸ். எம்.சி கி.கண்ணன் எம்.சி மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வி.தியாகராஜன் மாவட்ட பிரதிநிதி பொன்.கோ.விஜயன் ஆகியோரும் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ மறைந்த 3 வது வட்ட கழக செயலாளர் மு. மாணிக்கவேலன் அவர்களின் திருவுருவ படத்தை திறந்து வைத்து அவர் கழகத்திற்கு ஆற்றிய பணிகளை அனைவரும் எடுத்துக் கூறினார்கள். அவர் கழகத்தின் பால் கொண்ட ஈர்ப்பையும் கழகத்தில் அவர் செய்த பணிகள் மற்றும் தலைவர் பிறந்தநாள் விழாக்களில் அவர் செய்த நிகழ்ச்சிகளை எடுத்து சொல்லி நினைவு கூறப்பட்டது. றுதியாக மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள் தாசன் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து நினைவு உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் கிழக்கு பகுதி கழக செயலாளர் தி.மு. தனியரசு எம். சி , மாநில சட்டத்துறை துணை செயலாளர் முனைவர் ஜி. சந்திரபோஸ், பகுதி கழக நிர்வாகிகள் யு. எஸ். குறளரசன், ஏ. இந்துமதி, எம். வஜ்ரவேல், எம்.வி.குமார் , ஆர். குமரேசன், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் ஆர்.மோகனசுந்தரம், மாவட்ட பிரதிநிதிகள் ஆர். தினேஷ்குமார், எஸ். கணேஷ், எஸ். ஆர்.மலைராஜ், பி.எஸ். சைலஸ், பகுதி பிரதிநிதி வை. சின்னையன், வி. கே.ஏழுமலை, மாவட்ட மீனவர் அணி தலைவர் ஆர். நவக்குமார், தாழவை எஸ். ரஞ்சித், மாவட்ட விளையாட்டு அணி துணை அமைப்பாளர், வை.ம.கண்ணதாசன், ஜி.ஹரிஹரன், ஆர். லோகு,

பகுதி பிரதிநிதிகள் மு. கார்த்திக், கே. செந்தில், ஏ. ஜோ பெர்னாண்டஸ், ஏ.. ராஜேந்திரன், ஏ. புண்ணியமூர்த்தி ஆர். மணிமாறன், வி.தனபால், தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் எஸ்ராஜேஷ், பகுதி அமைப்பாளர்கள் எம். ராமு ஆர். நரேன் குமார், எம். சுந்தர்,எம். பாபு, ஜெ. குமரன்,பாலாஜி, இ. பூங்கொடி, அரவிந்தன், சி.முத்துக்குமார், கே.சரவணன், எஸ்.சரவணன், ஜி. குணசேகர், எஸ்.ஜோயல், ஜி. கணேஷ், பா.அஜித், ஜெ. பிரேம்குமார், டி. தேசப்பன், போஸ் வினோத், எம். ராஜா, எஸ். மழுவேந்தி, ராஜேந்திரன், எஸ்.மகேஷ், ஜெ.மாரிமுத்து, வி. சி.பிரபாகரன், எஸ்.யுவராஜ், சதீஷ், தினேஷ், வை. பா.யோகி, தனவேந்தன், ஆட்டோ சங்கர், ஜெய் விக்னேஷ், அன்பு ஆர். சுகுமாரன், ஆர். கணேசன் கே. போஸ், பி. முத்து என். பிரபு, ஆர். நெடுமாறன், எம். தியாகராஜன், எம். கௌதம், எம். மணிவண்ணன், எஸ். விஜயகுமார், பி. சரவணகுமார், அழகேசன், ஆர். பொன்முத்து, வி. மதன்குமார், ஆர். ஆகாஷ் ஆர். பிரதீப், மற்றும் மாவட்ட,பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், கிராம நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள், கழக உடன்பிறப்புகள் திரளாக பங்கேற்றனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி 3 வது வட்ட கழக செயலாளர் செயல் வீரர் மு.மாணிக்கவேலன் திருவுருவப்படத்திறப்பு விழாவில் பகுதிச் செயலாளர் வை.ம. அருள்தாசன் ஏற்பாட்டில் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. திறந்து வைத்து நினைவு உரையாற்றினார். இதில் கழக நிர்வாகிகளி மற்றும் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.


